கொள்கைக் குறிப்பு

# இயற்கை அனர்த்தக் காப்பீடு

மொழிக் கொள்கை தொடர்பான அசமந்தப் போக்கைத் தீர்த்து வைப்பது தீவெங்கிலும் சிறு மற்றும் மத்திய தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும்


## சுருக்கம்

ஓர் அதிகரித்த எண்ணிக்கையிலான இயற்கை அனர்த்தங்கள் இலங்கையை அண்மைய ஆண்டுகளில் பாதித்துள்ளன. சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்(SMEs) அனர்த்த மீட்சி மற்றும் வியாபார தொடர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் குறைவான முதலீடுகளோடு நிதி வளங்கலின்மையும் சேர்ந்த காரணத்தினால் குறிப்பாக இவ் அனர்த்தங்களின் தாக்கங்களுக்கு பாதிப்புறத்தக்கவையாக உள்ளன.

இலங்கையில் அனர்த்தக் காப்பீட்டின் மட்டுப்படுத்தப்பட்ட பாவனை பல காரணிகளின் விளைவாக ஏற்படுவதாகும். அவற்றுள் சில ஏற்கெனவே அறியப்பட்டவையும் பரவலாக கலந்துரையாடப்பட்டவையுமாகும். இக் கொள்கைக் குறிப்பு முன்னர் கலந்துரையாடப்படாதவையும் இலங்கையில் SMEகள் மத்தியில் இயற்கை அனர்த்தக் காப்பீடு குறைந்த அளவில் செய்யப்படுவதை அறிந்துகொள்வதற்காக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஆய்வின்போது தோன்றியவையுமான விசேட கண்டறிதலை விளக்குகிறது.

1987இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 13ஆவது திருத்தத்தின்[1] ஆதரவோடு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய இலங்கையின் மும்மொழிகளிலும் அனைத்து அரசாங்க தொடர்பாடல்களையும் கிடைக்கக்கூடியதாக செய்யும் ஒரு கொள்கைக்கு இலங்கை அரசு பற்றுறுதி பூண்டுள்ளது. கிடைக்கக்கூடிய காப்பீடுகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் தொடர்பாக இக் கொள்கையின் அமுலாக்கலின்மையானது, இலங்கையில் இயற்கை அனர்த்தக் காப்பீடு குறைவான அளவில் இருப்பதற்கு கணிசமாக பங்களிப்பாற்றியுள்ளது என்று வெரிட்டே கண்டறிந்துள்ளது.

கொழும்புக்கு வெளியே இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பகுதிகள் 30%ற்கு குறைவான ஆங்கில மொழி எழுத்தறிவையே கொண்டுள்ளன. கொழும்புப்பெரும்பாக பகுதியில்கூட அது சராசரியாக கிட்டத்தட்ட 45%மாகவே உள்ளது. எனினும், காப்பீடு தொடர்பான தகவல்கள் தனியார் காப்பீட்டுக் கம்பனிகளினாலும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் காப்பீட்டு நலன்புரி திட்டங்களினாலும் ஏறக்குறைய முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகின்றன. இது, சிங்களம் மற்றும் தமிழ் பேசும் மக்கள் இயற்கை அனர்த்தக் காப்பீட்டின் பயன்களை பெற்றுக்கொள்வதற்குத் தடையாக இருந்துவருகிறது.


## முக்கிய கண்டறிதல்கள்

### 1. அனர்த்தக் காப்பீடு செய்வதில் இலங்கை மிகக் குறைவாகவே செயலாற்றுகிறது. SMEகள் தான் இதனால் மிகவும் பாதிப்புறுபவர்களாவர்

- இலங்கையில் மொ.உ.உ இன்(GDP) வீதமென்ற வகையில் காப்பீட்டு பிரிமியமாக வரைவிலக்கணப்படுத்தப்படும் காப்பீட்டு ஊடுருவல் விகிதம் ஆசிய பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான வேறு நாடுகளோடு ஒப்பிடுகையில் குறைவானதாக உள்ளது.[2] பொது அல்லது ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதிகளின் உப பிரிவாக உள்ள தீக் காப்புறுதியின் கீழ் வழங்கப்படும் இயற்கை அனர்த்தக் காப்புறுதிக்கான ஊடுருவல் விகிதம் இன்னும் குறைவானதாக உள்ளது. சுவிஸ் *Re's*இன் உலகக் காப்பீடு 2015 பற்றிய மீளாய்வின்படி, ஆசியாவிற்கான ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதி ஊடுருவல் விகிதம் 1.74 ஆகும்.[3] இதற்கு மாறாக, இலங்கையின் ஆயுள் காப்புறுதி அல்லாத காப்புறுதியின் ஊடுருவல் விகிதம் 0.66 ஆகவே இருந்தது. இது, இந்தியா, வியட்நாம், தாய்லாந்து, மலேசியா ஆகிய ஆசிய நாடுகள் மற்றும் மொரோக்கோ கென்யா, டுனீசியா மற்றும் அங்கோலா ஆகிய குறை மற்றும் மத்திய வருமான நாடுகள் ஆகியவற்றை விடவும் குறைவானதாகும்.[4]
- இலங்கையில் பெரும்பாலும் பாரிய கைத் தொழில்களும் வர்த்தக சொத்துக்களும் இயற்கை அனர்த்தக் காப்பீடுகள் செய்துகொண்டுள்ளன. எனவே, SMEகள் மத்தியிலான இயற்கை அனர்த்த காப்பீட்டு ஊடுருவல் விகிதம் அதைவிடக் குறைவானதாக இருக்கக்கூடும்.

### 2. தனியார்துறை காப்பீட்டுச் சந்தைகள் மொழித் தடையில் பயனடைகின்றன:

- இலங்கையில் முதல் 6 பொது காப்பீடு வழங்குனர்கள் சந்தைப் பங்கின் மூன்றில் இரண்டு பங்கிற்கு உரியவர்களாகின்றனர். அவற்றுள் ஒன்று மட்டுமே (சந்தையின் 6%திற்கு குறைவாக உள்ளது) தீக் காப்பீட்டுப் பத்திரத்தை சிங்களத்தில் வழங்குகிறது. எந்தவொரு கம்பனியும் இவ்வாவணங்களை தமிழில் தரவில்லை.
- 2017 மே மாதம் இரத்தினபுரியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட SME உரிமையாளர்கள் தனியார்துறைக் காப்பீட்டுக் கம்பனிகளைப்

பிரதிநிதித்துவப்படுத்தும் முகவர்கள் மூலம் தாம் இயற்கை அனர்த்தக் காப்புறுதியை கொள்வனவு செய்திருந்ததாகக் கருதியிருந்தாகவும் எனினும் அனர்த்தத்தின் பின்னர் தமது இழப்பீட்டைப் பெறுவதற்குச் சென்றபோதுதான் அக்காப்புறுதியை விற்பனை செய்த முகவரினால் தாம் ஏமாற்றப்பட்டிருந்ததை உணர்ந்துகொண்டதாகவும் அறிவித்தனர். அவர்கள் கையொப்பமிட்ட ஆவணங்கள் முழுக்கமுழுக்க அங்கிலத்தில் இருந்தமையினால், முகவரினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அவர்களால் சரி பார்த்துக்கொள்ள முடியவில்லை.

### 3. அரச காப்பீட்டு நலன்புரித் திட்டங்கள் சுதேச மொழிகளில் அறிவிக்கப்படுவதில்லை:

- அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டு, தேசிய காப்பீட்டு நம்பிக்கை நிதியத்தினால் (NITF) நிருவகிக்கப்படும் தேசிய இயற்கை அனர்த்தக் காப்பீட்டுத் திட்டம்(NNDIP), அத்திட்டம் தொடர்பான தகவல்களை இந்த ஆண்டின் தொடக்கம் வரையில் தனது வலைத்தளத்தில் ஆங்கிலத்தில் மட்டுமே வழங்கியது. 2017 நவம்பர் 13 ஆம் திகதி இவ்வலைத்தளம் பரிசோதிக்கப்பட்டபோது NNDIP தொடர்பான தகவல் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தது. NNDIP தொடர்பான தகவல் 2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சிங்களத்தில் மாத்திரம் மொழிபெயர்க்கப்பட்டது (இந்தக் குறிப்பு வெளியிடப்படும் போது). தகவல் இன்னும் தமிழில் கிடைக்கவில்லை.

- 2017 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட SMEகள் பற்றிய ஆய்வுகள் தற்போதுள்ள NNDIP பற்றிய விழிப்புணர்வின்மையை வெளிப்படுத்தியது. 5,385 உறுப்பினர்கள் அடங்கிய சமூக மைய நிறுவனமொன்றுடன் நடத்தப்பட்ட கவனக்குவிப்பு கலந்துரையாடல்களும் அவர்கள் NNDIP பற்றி அறிந்தருக்கவில்லை என்று அறிவித்தது. பொதுவான விழிப்புணர்வின்மை இத் திட்டங்கள் தொடர்பான தகவல்களுக்கான மொழி வாய்ப்புகள் இல்லாமையின் விளைவாக ஏற்பட்டதாகும்.

### 4. வங்கித்துறை மொழி ஒழுங்கு விதிகள், காப்பீட்டுத் துறையில் இன்னும் அவ்வாறே பிரதிபலிக்கப்படவில்லை

- வங்கித் துறையிலுள்ள ஒழுங்குவிதிகள், வங்கித் தெரிவுகள் மற்றும் சேவைகளோடு தொடர்புபட்ட நியதிகள் வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் விரும்பும் மொழியில் கிடைக்கச்செய்ய வேண்டுமென்று குறித்துரைத்து அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் பணிப்புரை விடுத்து மொழிக் கொள்கைப் பிரச்சினையைத் தீர்த்துள்ளன.

- கம்பனிகள் காப்பீட்டு ஆவணங்களை வாடிக்கையாளருக்கு பொருந்தும் ஒரு இலங்கை மொழியில் வழங்க வேண்டுமென கோரும் ஒழுங்கு விதிகள் எதுவும் காப்பீட்டுக் கைத்தொழிலில் இன்னும் கிடைப்பதாக இல்லை.

## ஆய்வு மேலோட்டம்

### 1. இலங்கையில் குறிப்பாக SMEகளில் இயற்கை அனர்த்தக் காப்பீடு பெறுவது குறைவாக உள்ளது.

SMEகள் இலங்கையிலுள்ள எல்லா வியாபாரங்களினதும் 80%ஐக் கொண்டுள்ளது. இது கைத்தொழில் தாபனங்களின் 20%ஐயும் சேவைத் துறைகளின் 90%ஐயும் கொண்டுள்ளது.[5] SMEகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) அண்ணளவாக 52%ற்கும், நாட்டில் உள்ள மொத்த தொழில் வாய்ப்புகளில் 45%ற்கும் பங்களிப்பு செய்கின்றன.[6] பொருளாதாரத்துக்கும் தொழில் வாய்ப்புக்களுக்குமான SMEகளின் முக்கியத்துவத்தை வைத்துப் பார்க்கையில், பேரழிவு மிக்க இயற்கை அனர்த்தத்தைத் தொடர்ந்து அவற்றின் உரிய காலத்திலான மீட்சிக்கு வசதி ஏற்படுத்துவது மிக முக்கியமாகும். SMEகள் அனர்த்தத்திலிருந்து மீட்சி பெறுவது மற்றும் வியாபார தொடர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் குறைவான முதலீடுகளோடு சேர்ந்து அவற்றின் நிதி வளமின்மை காரணமாக இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்களுக்கு குறிப்பாக பாதிப்படையத் தக்கனவாக உள்ளன.


இலங்கையில் தனியார்துறை இயற்கை அனர்த்தக் காப்பீடு செய்தல் குறைவாக உள்ளதோடு, வழமையாக பெரிய கைத்தொழில் மற்றும் வர்த்தக சொத்துகளுக்கே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.[7] இலங்கை தனியார்துறை காப்பீட்டுச் சந்தை பொதுவாக நீண்ட தவணைக் காப்பீடு (ஆயுள் காப்புறுதி) மற்றும் பொதுவான காப்பீடு (ஆயுள் காப்புறுதி அல்லாத) என வகைப்படுத்தப்படலாம். இயற்கை அனர்த்தக் காப்பீடு பொதுக் காப்பீட்டின் கீழ் உள்ள உப பிரிவுகளான தீ மற்றும் மின்னல் காப்புறுதிகளுக்கான ஒரு விரிவாக்கமாக வழங்கப்படுகிறது.

இலங்கையில் காப்பீட்டு ஊடுருவல் விகிதம் (மொ.உ.உ இன் (GDP) வீதமென்ற வகையில் காப்பீட்டு பிரிமியமாக) ஆசிய பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான வேறு நாடுகளோடு ஒப்பிடுகையில் குறைவானதாக உள்ளது.[8] இலங்கையின் பொதுக் காப்பீட்டு ஊடுருவல் மட்டம் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் முறையே 0.66 மற்றும் 0.67 ஆக இருந்தது. ஒப்பீட்டளவில் இந்தியா, வியட்னாம், தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளில் பொது காப்பீட்டு ஊடுருவல் மட்டம் 2015இல் முறையே 0.72, 0.74, 1.79 மற்றும் 1.68 ஆக இருந்தது.[9] ஏனைய குறை மற்றும் மத்திய வருமான நாடுகளான மொரோக்கோ கென்யா, டுனீசியா மற்றும் அங்கோலா ஆகியவற்றின் பதிவு செய்யப்பட்ட பொது காப்பீட்டு ஊடுருவல் மட்டம் முறையே 1.99, 1.88, 1.58 மற்றும் 0.8, ஆகும். இவை அனைத்தும் இலங்கையைவிட உயர்வான மட்டங்களாகும்.[10]

## கொள்கைக் குறிப்பு

இலங்கையில் பொதுக் காப்பீட்டின் ஒரு உப பிரிவான தீக் காப்பீடு காட்சி 1 இல் எடுத்துக் காட்டப்பட்டவாறு இதைவிடக் குறைவான ஊடுருவல் மட்டத்தைக் கொண்டுள்ளது. எனவே, தீக் காப்பீட்டின் கீழ் வரும் இயற்கை அனர்த்த அல்லது இயற்கை பேரழிவு காப்பீட்டின் உண்மையான ஊடுருவல் மட்டம் இதைவிடக் குறைவாக இருக்கக்கூடும். மேலும், தனியார்துறைக் காப்பீடு பெருமளவுக்கு பாரிய கைத் தொழில்களுக்கும் வர்த்தக சொத்துக்களுக்கும் வழங்கப்படுவதனால் SMEகள் மத்தியிலான அனர்த்தக் காப்பீட்டு ஊடுருவல் குறிப்பாக குறைவாக இருக்கக்கூடும்.

காட்சி 1: இலங்கையில் தீக் காப்பீட்டு ஊடுருவல் மட்டம்.




*மூலம்: IBSL ஆண்டறிக்கையின் அடிப்படையில் ஆக்கியோனின் சொந்தக் கணிப்பீடு*


*குறிப்பு : தீக் காப்பீட்டு ஊடுருவல் GDPயின் ஒரு வீதமாக மொத்த எழுதப்பட்ட பிரீமியமாக தீக் காப்பீட்டிலிருந்து பெறப்பட்டது.*

### 2. தனியார்த்துறைக் காப்பீட்டு கைத்தொழில்கள் மொழித் தடையிலிருந்து பயன் பெறுகின்றன

இயற்கை அனர்த்தக் காப்பீட்டு வழங்கலில் பல தவறுகள் இருக்கும் அதேவேளை, மொழித் தடைகள் இயற்கை அனர்த்தக் காப்பீட்டைப் பெற்றுக்கொள்வதிலும் அதிலிருந்து பயன்களைப் பெறுவதிலும் SMEகள் எதிர்நோக்கும் ஒரு குறிப்பிடத் தக்க தடையாக உள்ளது என்பதை எமது ஆய்வு வெளிப்படுத்தியது. ஏதேனுமொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு அவ்வொப்பந்தம் பயன்மிக்க வகையில் அமுல்படுத்தப்படுவதை உறுதிசெய்யுமுகமாக சம்பந்தப்பட்ட நியதிகளையும் நிபந்தனைகளையும் அனைத்து தரப்பினரும் புரிந்துகொள்ளவேண்டும். எனினும், ஒரு காப்பீட்டின் நியதிகளையும் நிபந்தனைகளையும் உள்ளடக்கியிருக்கும் காப்புறுதி ஆவணங்கள் பெரும்பாலும் ஆங்கிலத்தில் மாத்திரமே வழங்கப்படுகின்றன என்பதோடு, அம்மொழியில் நன்கு புலமைபெற்றவர்களினாலும் முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு கடினமான தொழில்நுட்ப மற்றும் சட்ட வாசகங்களைக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மக்களின் சராசரி ஆங்கில எழுத்தறிவு மட்டம் 30% மட்டுமே[11] என்பதைக் கொண்டு பார்க்கும்போது காப்பீட்டு ஆவணங்களை அல்லது ஏதேனும் ஒப்பந்த ஆவணங்களை சுதேச மொழிகளில் வழங்காமை அத்தகைய சேவைகளை மதிப்பீடு செய்வது மற்றும் பெற்றுக்கொள்வதிலிருந்து பலரை, குறிப்பாக பிராந்திய மட்டங்களில் இருப்பவர்களை தடுக்கின்றது.

காட்சி 2: மே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு வெள்ளப்பெருக்கினால் கடுமையாக பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களின் 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய மக்களின் ஆங்கில மொழி எழுத்தறிவை எடுத்துக் காட்டுகிறது. ஆங்கில மொழி எழுத்தறிவு மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ள பிராந்தியங்களில் கணிசமான அளவு குறைவாக உள்ளது. இத் தரவுகள் காப்பீட்டு முகவர்களால் பிராந்திய மற்றும் கிராமிய வர்த்தகங்கள் சுரண்டலுக்கு உள்ளாகக்கூடிய தன்மையை வெளிப்படுத்துகிறது. பொதுவாக இம் முகவர்கள் காப்பீட்டு கம்பனிகளின் நேரடி ஊழியர்கள் அல்ல. ஆனால் சேகரிக்கப்படும் பிரீமியங்கள் மற்றும் புதிய சேர்க்கைகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் எவ்வளவு அதிகமான காப்பீடுகளை விற்க முடியுமோ அவ்வளவு காப்பீடுகளை விற்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

காட்சி 2: தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களின் ஆங்கில மொழி எழுத்தறிவு மட்டங்கள்.




*மூலம்: இலங்கை குடிசன மற்றும் வீட்டு மதிப்பீடு, 2017*

*குறிப்பு: ஆங்கில எழுத்தறிவு வாசித்தல் மற்றும் எழுதுதலுக்கான ஆற்றலாக மதிப்பிடப்படுகிறது.*

2017 மே மாதம் இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட SME உரிமையாளர்களோடு நாம் நடத்திய கலந்துரையாடல்கள்[12] தனியார் துறை இயற்கை அனர்த்தக் காப்பீட்டை முகவர்கள் மூலமாக கொள்வனவு செய்திருந்த பல வியாபார உரிமையாளர்கள் பின்னர் எந்த இழப்பீட்டையும் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தனர் என்பதை வெளிப்படுத்தியது. இவ் SMEகள் தமது காப்பீட்டு நியதிகளையும் நிபந்தனைகளையும் ஆங்கிலத்தில் பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களது கூற்றின்படி, காப்பீட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது அவர்களது காப்பீட்டுப்பத்திரம், வெள்ள காப்பீட்டையும் உள்ளாக்குவதாக அவர்களுக்கு காப்பீட்டு முகவரினால் அறிவிக்கப்பட்டது. வெள்ளம் ஏற்பட்ட பின்னர் இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தபோதுதான்

## கொள்கைக் குறிப்பு


வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்புகள் அவர்களுடைய காப்பீட்டுப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

தெரிவுசெய்யப்பட்ட காப்பீட்டுக் கம்பனிகளின் மும்மொழிகளிலுமான தீக் காப்பீட்டு ஆவணங்களின் கிடைக்கக்கூடிய தன்மை காட்சி 3 இல் காட்டப்படுகிறது. தீக் காப்பீட்டு ஆவணங்கள் மும் மொழிகளிலும் கிடைக்கக்கூடியனவாக உள்ளனவா என்பதை அறிந்துகொள்வதற்காக ஒவ்வொரு காப்பீட்டுக் கம்பனியோடும் நடத்திய தொலைபேசி அழைப்புகளின் வாயிலாக தகவல்கள் திரட்டப்பட்டன. ஆவணங்கள் ஆங்கிலத்தில் தாராளமாகக் கிடைக்கக்கூடியதாக இருப்பதாக எல்லாக் கம்பனிகளும் அறிவித்தன. மக்கள் காப்பீடு (People's Insurance) மட்டுமே சிங்கள மொழியிலும் ஆவணங்களைக் கொண்டிருந்தது.

### 3. அரச காப்பீட்டுத் திட்டங்கள் சுதேச மொழிகளில் அறிவிக்கப்படுவதில்லை.

தனியார் துறை காப்பீட்டுச் சந்தையில் நிலவும் சில இடைவெளிகளைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் (GoSL) தேசிய காப்பீட்டு நம்பிக்கை நிதியத்தின்

காட்சி 3: ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழில் தீக் காப்புறுதி பத்திரம் கிடைக்கக்கூடிய தன்மை[13]




*மூலம்: மேலே குறிப்பிடப்பட்ட காப்பீட்டுக் கம்பனிகள் ஒவ்வொன்றினதும் தலைமையகத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகள்.*

*Fairfirst இன்சூரன்ஸ் யூனியன் எசூரன்ஸ் பொதுக் காப்பீட்டுடன் இணைக்கப்பட்டது. எனவே, அறிவிக்கப்பட்ட சந்தை பங்குபெயார்பெஸ்ட் மற்றும் யூனியன் எசூரன்ஸ் ஆகியவற்றின் அறிவிக்கப்பட்ட பெறுமதிகள்*

(NITF) ஊடாக வழங்கப்படுவதும், 2016 ஏப்ரல் 1ஆம் திகதி அமுலுக்கு வந்ததும், அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதுமான ஒரு தேசிய அனர்த்தக் காப்பீட்டுப் பத்திரத்தை (NNDIP) அறிமுகப்படுத்தியது. இப் பத்திரம் LKR 2.5 மில்லியன் வரை சகல குடும்பங்களினதும் சிறு வியாபார ஸ்தாபனங்களினதும் ஆயுள் மற்றும் சொத்துக்களை உள்ளடக்குவதோடு, அவை ஒவ்வொன்று தொடர்பாகவும் சொத்துக்கள் மற்றும் உள்ளடக்கங்களுக்கு சூறாவளி, புயல், வெள்ளம், மண்சரிவுகள், சுழற்காற்று, நிலநடுக்கம், சுனாமி மற்றும் வறட்சி தவிர்ந்த வேறு ஏதேனும் அதுபோன்ற இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் இழப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.[14] எனினும், இக் காப்பீட்டின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சிறு வியாபாரங்கள் LKR 10 மில்லியனுக்குக் குறைவான வருட வருமானத்தை ஈட்டும் ஸ்தாபனங்களாகும். எனவே, இது உள்ளடக்கத்தை சிறு தொழில் முயற்சிகளுக்கு மட்டுப்படுத்துகிறது.[15]

NNDIP திட்டம் 2 வருடங்களாகவும் 2 பிரதான வெள்ள நிகழ்வுகளின் போதும் (மே 2016 மற்றும் 2017) அமுலில் இருந்தபோதும் அதன் பயனாளிகள் மத்தியில் இத் திட்டம் தொடர்பான விழிப்புணர்வு மட்டம் மிகக் குறைவாக உள்ளது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட மே 2017 வெள்ளத்தின் துரித அனர்த்தத்திற்குப் பின்னரான தேவைகள் மதிப்பீடு "இத் திட்டம் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வு மட்டம் போதுமானதல்ல" என்பதை இனங்கண்டது. மாத்தறை மற்றும் காலி பகுதிகளிலுள்ள SMEகள் பற்றி VR இனால் நடத்தப்பட்ட ஆய்வுகள்[16] NNDIPஇலிருந்து இழப்பீடு பெற்றுக்கொள்வதற்கு தகைமையுடைய பெரும்பாலான சிறு வியாபாரங்கள் இத் திட்டம் அமுலில் இருப்பதை அறியாதிருந்தனர் என்பதை வெளிப்படுத்தியது. களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள மற்றும் பாலிந்தநுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள 5,385 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சமூக மைய நிறுவனமான சுய உதவி குழு வள நிலைய (SHGRC) த்தோடு நடத்தப்பட்ட நேர்முகங்கள் இதனை மேலும் உறுதிப்படுத்தின. SHGRC மே 2017 வெள்ளத்தின் பின்னர் உடனடியாக தமது உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்ட அழிவுகளின் அளவை மதிப்பிடுவதற்கு விரிவானதொரு ஆய்வினை மேற்கொண்டதோடு, 94 சில்லறைக் கடைகள், 452 உணவு/இனிப்புப் பண்டம் தயாரிப்பாளர்கள் மற்றும் 19 கூவி விற்போர் பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் அவர்களுக்கு உதவி தேவைப்பட்டதென்றும் இனங்கண்டது. எனினும், அவர்கள் NNDIPவைப் பற்றி அறிந்திருக்காததோடு, அத் திட்டத்திலிருந்து இழப்பீடு மற்றும் உதவிகளை நாடவுமில்லை.

இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ முறைமை (Desinventar) பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் விபரங்களைத் தருவதில்லை. மே 2017 வெள்ளத்தின் அனர்த்ததுக்குப் பிந்திய தேவைகள் மதிப்பீடும் இதனை ஒரு பிரச்சினையாக இனங்கண்டது. எனினும்,

ஒரு பதில் சுட்டியைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் எண்ணிக்கையை மதிப்பிடுவது சாத்தியமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் வீதம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் வீதத்தை மதிப்பிடுவதற்கான ஒரு பதில் சுட்டியாகப் பயன்படுத்தப்படலாம்.

மே 2017 வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை தொடர்பாக கிடைக்கக்கூடிய தரவுகள் உள்ளன. அவை தேசிய அனர்த்த நிவாரண நிலையத்தினால் (NDRC) தொகுக்கப்பட்டு மே 2017 துரித அனர்த்தத்திற்குப் பிந்திய தேவைகள் மதிப்பீட்டில் பதியப்பட்டுள்ளன. காட்சி 4 மே 2017 வெள்ளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதிக்கப்பட்ட ஆட்களின் வீதத்தின் அடிப்படையில் கோரிக்கை விண்ணப்பங்களை தாக்கல் செய்யும் நுண் மற்றும் சிறு வியாபாரங்களின் வீதங்களை ஒப்பிடுகிறது.

பாதிக்கப்பட்ட ஆட்களின் வீதம் கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் வியாபாரங்களின் வீதத்தைவிட மிக அதிகமாகும். பெரும்பாலான மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் வீதம் கோரிக்கைகள் சமர்ப்பித்த வியாபாரங்களின் 2 – 4 மடங்கு விகிதமாகும். இங்கு விளக்கம் என்னவெனில், கூடிய எண்ணிக்கை தாராளமாக கிடைக்கும் இழப்பீட்டிற்கான வாய்ப்புகள் பற்றி வியாபாரிகள் மத்தியில் நிலவும் குறைவான விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறது என்பதாகும்.

இந்த விடயம் தொடர்பாக விழிப்புணர்வின்மைக்கு பல காரணங்கள் இருக்கக்கூடும் என்ற அதேவேளை, இத்திட்டம் தொடர்பாக சுதேச மொழிகளில் தகவல்கள் இருக்கவில்லை என்பதை இவ்வாய்வு கண்டறிந்தது. NITF வலைத்தளத்தில் NNDIP தொடர்பாக காணப்படும் தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஆங்கிலத்தில் மட்டுமே இருந்தன. 2107 நவம்பர் 13 ஆம் திகதி இறுதியாகப் பார்த்தபோது, NNDIP பற்றிய தகவல்கள் ஆங்கிலத்தல் மாத்திரமே இருந்தன. இந்த வருட தொடக்கத்தில் இவ் வலைத்தளம் NNDIP பற்றிய தகவல்களை சிங்களத்திலும் சேர்த்துக்கொள்வதற்காக இற்றைப்படுத்தப்பட்டது. எனினும், NNDIP பற்றிய தகவல்களை தமிழில் சேர்த்துக்கொள்வதற்காக அது இற்றைப்படுத்தப்படவில்லை (பின்னிணைப்பு 1)

## 4. வங்கித் துறை மொழி ஒழுங்குவிதிகள் காப்பீட்டுக் கைத்தொழில் அதேபோன்று பின்பற்றப்படவில்லை

தற்போது காப்பீட்டு ஆவணங்கள் எந்த மொழியில் வழங்கப்பட வேண்டுமென்று குறித்துரைப்பதற்கான சட்டம் அல்லது விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எதுவுமில்லை.[17] எனினும், வாடிக்கையாளர் விரும்பும் மொழியில் காப்பீட்டு ஆவணங்களை வழங்குவதை கட்டாயப்படுத்துவது அனர்த்த இடர் காப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு மொழி ஒரு தடையாக இருப்பதை இல்லாதொழிக்க முடியுமென்பதோடு இக் காப்பீட்டுக் கைத்தொழிலில் SMEகளின் நம்பிக்கையை அதிகரிப்பதை நோக்கிய ஒரு முக்கியமான அடியெடுப்பாக அமையவும் முடியும்.

இலங்கையில் வங்கித் தொழில்துறை ஏற்கெனவே இத் தேவையை இனங்கண்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான ஒரு நடத்தைக் கோவையை அறிமுகம் செய்துள்ளது. வேறு தேவைப்பாடுகளுக்கு மத்தியில், இக் கோவை வங்கித் தொழில் தெரிவுகள் அனைத்தினதும் நியதிகளும் நிபந்தனைகளும் வாடிக்கையாளர் விரும்பும் மொழியில் கிடைக்கச் செய்ய வேண்டுமென குறித்துரைக்கிறது.[18] (விபரங்களுக்கு பெட்டி 1 ஐப் பார்க்க)

இக்கொள்கை சீர்திருத்தப் பணியை இலங்கை காப்பீட்டு கைத்தொழிலின் ஒழுங்குபடுத்தல் அமைப்பாக விளங்கும் இலங்கை காப்பீட்டுச் சபைக்கு (IBSL) வழங்கமுடியும். 2007 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டம்

காட்சி 4: மே 2107 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீதத்துடனான விண்ணப்பங்கள் தாக்கல் செய்யும் நுண் மற்றும் சிறு வியாபாரங்களின் வீதத்தின் ஒப்பீடு.

| மே 2017 வெள்ளத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் | தாபிக்கப்பட்டுள்ள வியாபாரங்களின் எண்ணிக்கை (முறைசாரா நுண் + முறைசார் சிறு வியாபாரங்கள்)* | (a)நிறுவப்பட்டுள்ள மொத்த வியாபாரங்களின் %மாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்** | (b)மொத்த மக்கள் தொகையின் வீதமாக பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை*** | விகிதம் (b)/(a) |
|---|---|---|---|---|
| Ratnapura | 41,439 | 9.6% | 21.6% | 2.25 |
| Matara | 40,417 | 7.1% | 28.7% | 4.04 |
| Galle | 44,944 | 6.2% | 14.9% | 2.40 |
| Kaluthara | 56,598 | 4.2% | 15.0% | 3.57 |
| Hambanthota | 29,856 | 0.6% | 16.6% | 26.67 |

*மே 2017 வெள்ளம் மற்றும் மண்சரிவு, துரித அனர்த்தத்துக்குப் பிந்திய தேவைகள் மதிப்பீடு

**கட்டட சேதம் மற்றும் இருப்பு சேதம் ஆகியவற்றிற்காக SMEகளிடமிருந்து 1.1.2017 அன்றுள்ளவாறு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக NITFஇனால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வீதம் கணிப்பிடப்பட்டது.

***மே 2017 வெள்ளம் மற்றும் மண்சரிவு, துரித அனர்த்தத்துக்குப்பிந்திய தேவைகள் மதிப்பீடு மற்றும் குடித்தொகை மற்றும் வீடுகள் மதிப்பீடு 2012 ஆகியவற்றிலிருந்து தரவுகள் திரட்டப்பபட்டன.

## கொள்கைக் குறிப்பு

மற்றும் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்பீட்டு கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதிகளினால் (RII) IBSL ஆளப்படுகிறது.[19] RII சட்டத்தின்படி, காப்பீட்டுப் பத்திரங்களைக் கொண்டிருப்பவர்கள் மற்றும் கொண்டிருக்கக்கூடியவர்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு IBSL பொறுப்பாக உள்ளது. காப்பீட்டு பத்திரங்களை வைத்திருப்பவர்களின் நலன்களைப் பாதுகாக்கு முகமாக காப்பீட்டாளர்கள், தரகர்கள் மற்றும் இழப்பு செவ்வைப்படுத்துவோர் ஆகியோருக்கு பணிப்புரைகள் விடுப்பதற்கும் IBSLற்கு சட்டம் மேலும் அதிகாரமளிக்கிறது. கடந்த காலங்களில் IBSL காப்பீட்டுபத்திரம் வைத்திருப்பவர்களுக்கு உரிய காலத்தில் காப்பீட்டு ஆவணங்களை வழங்குதல், காப்பீட்டு விளம்பரங்கள் RII சட்டத்திற்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை விதித்துரைத்தல் மற்றும் காப்பீட்டு கோரிக்கைமீது உரிய காலத்திலான கொடுப்பனவை விதித்துரைத்தல் முதலிய பணிப்புரைகளை விடுத்துள்ளது.

பெட்டி 1: உரிமம் பெற்ற வங்கிகளுக்கான நடத்தைக்கோவையில் மொழி விதிப்புரை

2006 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் வியாபாரத்தின் எந்தவொரு அம்சமும் நடத்தப்படவேண்டிய விதம் தொடர்பாக உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பணிப்புரை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளித்தது. 2011 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கப் பணிப்புரை, வாடிக்கையாளரின் நலன்களைப் பாதுகாத்தல், வாடிக்கையாளருக்கும் வங்கிகளுக்குமிடையே ஆரோக்கியமான உறவுகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் வங்கித்தொழில் துறையில் வாடிக்கையாளர் உறுதித்தன்மையை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளினாலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஒரு நடத்தைக் கோவையை விதித்துரைக்கும் வாடிக்கையாளர் பிரகடனமொன்றை விடுத்தது.

வங்கித்தொழில் தெரிவுகளினதும் சேவைகளினதும் நியதிகளும் நிபந்தனைகளம் வழங்கப்படவேண்டிய முறையை வாடிக்கையாளர் பிரகடனம் குறித்துரைக்கிறது

"வங்கிகளிடமிருந்து தாம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு தெரிவு அல்லது சேவை தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை முழுமையாக புரிந்துகொள்வதற்குமான உரிமை வாடிக்கையாளருக்கு உண்டு. இது தொடர்பாக, உரிமம் பெற்ற வங்கிகள்:

அ) "ஒவ்வொரு தெரிவு அல்லது சேவையோடு தொடர்புபட்ட "நியதிகள் மற்றும் நிபந்தனைகள்" வாடிக்கையாளருக்கு அவர்கள் விரும்பும் மொழியில் கிடைக்கச் செய்யப்படும்"

என்பதை உறுதி செய்யவேண்டும்.

வங்கித்தொழில் மற்றும் காப்பீட்டு கைத்தொழில் ஆகிய இரண்டும் நிதித் துறையைச் சார்ந்தவையாகும் என்பதோடு, வாடிக்கையாளரோடு ஒரு ஒப்பந்த அடிப்படையில் கருமமாற்றுகின்றன. வங்கித் தொழில் கைத்தொழிலிருந்து ஒரு உதாரணத்தைப் பின்பற்றி, அதேபோன்ற ஒரு வழக்கத்தைக் காப்பீட்டு கைத்தொழிலில் கடைப்பிடிப்பது வாடிக்கயைாளர்கள் ஏமாற்றப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, காப்பீட்டுக் கைத்தொழிலில் பொதுமக்களினதும் SMEகளினதும் நம்பிக்கையை மேம்படுத்த உதவும்.

வெறிட்டே ரிசேச் நிறுவனத்தின் பொருளாதார ஆராய்ச்சி அணி இவ்வாய்வினை தொகுத்தது.

கொள்கை சுருக்கம் வினுரா ஜயசிங்கவிடமிருந்து ஆராய்ச்சி உறுதுணையோடும், வென்யா டீ சில்வாவிடமிருந்து பதிப்பாசிரியர் உறுதுணையோடும் சச்சிந்த பெர்னாண்டோவினால் ஆக்கப்பட்டது. ஒட்டுமொத்த ஆராய்ச்சி மற்றும் பதிப்பாசிரியர் மேற்பார்வை சுபாசினி அபேசிங்க மற்றும் நிசான் டீ மெல் ஆகியோரினால் செய்யப்பட்டது.

இவ்வணி இரத்தினபுரி மாவட்டத்தில் கள ஆராய்ச்சிக்கு வசதியேற்படுத்தியமைக்காக சப்ரகமுவ வர்த்தகச் சங்கத்திற்கும், வழங்கிய ஆதரவு மற்றும் கருத்துகளுக்காக இலங்கை வர்த்தக சங்கம் மற்றும் பிராந்திய வர்த்தக சங்கங்கள் (பட்டியல் கீழே) ஆகியவற்றுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

## E N D N O T E S

[1] The Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, available at :http://www.parliament.lk/files/pdf/constitution.pdf, [accessed on: December 2017].

[2] Insurance Board of Sri Lanka, 'Statistical Review 2016', 2016, available at: http://www.ibsl.gov.lk/images/IBSL-AR%20 2016-Inner-21-59.pdf, [accessed on: November 2017].

[3] Swiss Re, Sigma No3/2016, 'World Insurance in 2015 – Steady growth amidst regional disparities', (2016), available a:t http://media.swissre.com/documents/sigma_3_2016_en.pdf, [accessed on: December 2017].

[4] Ibid.

[5] Secretariat for Senior Ministers, 'The National Human Resources and Employment Strategy for Sri Lanka', 2012, available at: http://www.nhrep.gov.lk/images/pdf/nhrep_final.pdf, [accessed on: January 2017].

[6] Ministry of Industry of Commerce, 'SME – National Policy Framework for Small and Medium Scale Enterprise Development', available at: http://www.industry.gov.lk/web/images/pdf/framew_eng.pdf, [accessed on: January 2017].

[7] Disaster Management Center, Ministry of Disaster Management, 'Sri Lankan National Disaster Management Plan 2013-2017', 2014

[8] Insurance Board of Sri Lanka, 'Statistical Review 2016', 2016,available at: http://www.ibsl.gov.lk/images/IBSL-AR%20 2016-Inner-21-59.pdf, [accessed on: November 2017].

[9] Op cit., Swiss Re.

[10] Op cit., Insurance Board of Sri Lanka.

[11] Census of population and housing in Sri Lanka 2012, available at:http://www.statistics.gov.lk/PopHouSat/CPH2011/index.php?fileName=FinalPopulation&gp=Activities&tpl=3, [accessed on: January 2018]

[12] Focus group discussions with SMEs from the Ratnapura district who were affected by the May 2017 floods. The discussions were arranged by the Sabaragamuwa Chamber of Commerce. The focus group consisted of 10 SMEs.

[13] Op cit., Insurance Board of Sri Lanka.

[14] National Insurance Trust Fund, available at: http://www.nitf.lk/ENGLISH/National%20Natural%20Disaster.html, [accessed on: November 2017]

[15] As per the SME National Policy Framework for Small and Medium Scale Enterprise Development (http://www. industry. gov.lk/web/images/pdf/framew_eng.pdf) SMEs are categorised as follows: Micro Enterprises are enterprises that earn less than LKR 15 million annual revenue; Small Enterprises are enterprises that earn an annual revenue of LKR 16 million – LKR 250 million; Medium Enterprises are enterprises that earn an annual revenue of LKR 251million – 750 million.

[16] Four SMEs were surveyed from the Galle district and three SMEs from the Matara district who were affected by the 2017 May floods.

[17] Information obtained from an application to receive information under the Right to Information Act No.12 of 2016 submitted to the Insurance Board of Sri Lanka on 4th October 2017 requesting "All documents containing information on rules relating to the language which must be used in drafting insurance related documents in Sri Lanka". The reply was received on 10th October 2017 stating "No rules or any related documents have been issued by the Insurance Board of Sri Lanka on specifying language to be used in drafting insurance related documents".

[18] Monetary Board of Central Bank of Sri Lanka, 'Banking Act Direction No.8 of 2011 – Customer Charter of Licensed Banks', 2011, available at:http://www.cbsl.gov.lk/pics_n_docs/09_lr/_docs/directions/bsd/BSD_2013/bsd_LCB_Up_to_30_Nov_2013.pdf, [accessed on: January 2018].


[19] Regulation of Insurance Industry Act, No.43 of 2000 as amended by Act, No. 27 of 2007 and Act, No. 03 of 2011, available at: http://www.ibsl.gov.lk/images/RII-Act-No-43-of-2000.pdf, [accessed on: January 2017].

**கொள்கைக் குறிப்பு**

## பிண்ணிணைப்பு 1


### ஆங்கில இணையதளம்




### சிங்கள இணையதளம்




### தமிழ் இணையதளம்






## பிண்ணிணைப்பு 2

**IBSL**
INSURANCE BOARD OF SRI LANKA

**INSURANCE BOARD OF SRI LANKA**
(Established under Act No. 43 of 2000)

Level 11, East Tower, World Trade Centre, Echelon Square, Colombo 1.
Tel: General : +94 11 2396184-9, Fax: +94 11 2396190 Website: www.ibsl.gov.lk

**BY REGISTERED POST/FAX** **Ref: IBSL/LEG/17/10/249**

10th October 2017

Ms. Rashmi Dias,
No. 5A, Police Park Place
(Off Police Park Avenue),
Colombo 05.

Dear Madam,

**Application to receive information under the Right to Information Act, No. 12 of 2016**

We refer to your letter dated 04th October 2017, on the above.

Responses to your application are listed below:

1. No Guidelines or any related documents have been issued by Insurance Board of Sri Lanka (IBSL) on drafting insurance proposals. However, Guidelines on Linked long term business dated 01-05-2007 and the amended Guidelines made thereto dated 15-03-2016 and 21-10-2016 can be downloaded from IBSL website from the following link:

   "http://www.ibsl.gov.lk/instructions-and-guidelines/guidelines.html"

2. No Rules or any related documents have been issued by IBSL on specifying language to be used in drafting insurance related documents in Sri Lanka;

3. No Rules or any related documents have been issued by IBSL on setting limits for insurance proposals;

4. A List of all licensed insurance companies in Sri Lanka and their contact details can be downloaded from IBSL website from the following link. However, the branches of such companies which operate in Kandy has to be checked from such companies on an individual basis:

   "http://www.ibsl.gov.lk/insurance-companies.html"

5. Any Rules, Regulations, Orders, Determinations, Terms and Conditions made by IBSL can be downloaded from IBSL website from the following link:

   "http://www.ibsl.gov.lk/insurance-legislation.html"

Yours faithfully,

Ranil Angunawela
**Director Legal**